ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2019 ஒத்தோபர் 14 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 ஓகத்து

### முக்கிய பண்புகள்

- இறக்குமதிகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த வேளையில், முன்னைய மாதத்தில் ஏற்றுமதிகளில் காணப்பட்ட வீழ்ச்சி பெருமளவிற்கு மீட்சியடைந்தமையின் காரணமாக 2019 ஓகத்தில் வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது. 2019 ஓகத்தில் இறக்குமதிச் செலவினம் 16.6 சதவீதம் (ஆண்டிற்கு ஆண்டு) கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் முக்கிய ஏற்றுமதி வகைகளின் விலைகள் குறைவடைந்தமையின் பிரதான காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 0.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) பகுதியளவில் வீழ்ச்சியடைந்தன.
- 2019 ஓகத்தில் வர்த்தகப் பற்றக்குறை 2019 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 717 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 540 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.
- 2019 ஓகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் உறுதியாக மீட்சியடைந்து முன்னைய மாதத்தினைக் காட்டிலும் 24.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதன் இடைவெளியும் குறுக்கமடைந்தது.
- 2019 ஓகத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 518 மில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 4,414 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியைவிட 7.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.
- 2019 ஓகத்தில் அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் உட்பாய்ந்த வேளையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பனவற்றுக்கான வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.
- 2019 ஓகத்து இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.5 பில்லியன்களாக விளங்கியதுடன் இது 5.1 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும்.

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[(அ)]

| வகை | ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | சன-ஓகத்து 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,037 | 1,033 | -0.4 | 7,842 | 8,031 | 2.4 |
| இறக்குமதிகள் | 1,887 | 1,574 | -16.6 | 15,083 | 12,886 | -14.6 |
| வர்த்தக மீதி (தேறிய) | -850 | -540 | | -7,240 | -4,854 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 376 (ஆ) | 270 (இ) | -28.3 | 2,971 (ஆ) | 2,380 (இ) | -19.9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 534 | 518 | -3.0 | 4,777 | 4,414 | -7.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -6 | -12 | | 44 | 22 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 207 | 168 | | 4,153 | 5,819 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 75 | 16 | | 657 | 432 | |
| நீண்ட காலக் கடன்கள் | 132 | 152 | | 997 | 987 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,500 | 4,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 252 | 164 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | | | | 1,422 | 501 | |
| திரண்ட நிலுவை | | | | 474 | 1,451 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை


(அ) தற்காலிகமானது
(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 7,240 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,386 மில்லியனினால் ஐ.அ.டொலர் 4,854 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது. இவ்வீழ்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.


- அதேவேளை, ஏற்றுமதிகளின் நியதிகளில் இறக்குமதிகளின் சார்பு ரீதியிலான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட குறைப்பிலும் பார்க்க இறக்குமதி விலைகள் விரைவான வேகத்தில் குறைவடைந்தமையின் காரணமாக 5.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) மேம்பட்டன. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதத்தினால் சிறிதளவில் தேய்வடைந்தது.

**வரைபடம்: 1 : வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைவதற்கு பங்களித்த முக்கிய காரணிகள்: 2019 சனவரி - ஓகத்து (ஐ.அ.டொ. மில்லியன்)**





**மூலம்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2018 – 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2018 – 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி


## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 ஓகத்தில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,033 மில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு வேளாண்மை ஏற்றுமதிகளிலும் அதனைத்தொடர்ந்து கனிப்பொருள் ஏற்றுமதிகளிலும் காணப்பட்ட வீழ்ச்சி வழிவகுத்திருந்த வேளையில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான உயர்ந்த ஏற்றுமதிகளின் ஆதரவுடன் கைத்தொழில் ஏற்றுமதிகள் வளர்ச்சி கண்டன. புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதிகள் 7.0 சதவீதத்தினால் அதிகரித்து, அனைத்து முக்கிய சந்தைகளிலுமிருந்தான, குறிப்பாக 12.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த ஐரோப்பிய

ஒன்றியத்திலிருந்தான உயர்ந்த கேள்வியை பிரதிபலித்தது. இரசாயன உற்பத்திகள், அச்சிடுகின்ற கைத்தொழில் உற்பத்திகள், விலங்குத்தீன், பிளாத்திக்கு மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் அதிகரித்தன. எனினும், டயர், அறுவைச்சிகிச்சை மற்றும் ஏனைய நோக்கங்களுக்கான கையுறைகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான குறைந்த வருவாய்களின் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் உணவு, குடிபானம், புகையிலை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு காய்கறிகள், பழவர்க்கங்கள், விதைத் தயாரிப்புக்கள் அதேபோன்று தயாரிக்கப்பட்ட புகையிலை என்பனவற்றின் தாழ்ந்த ஏற்றுமதிகள் காரணமாக அமைந்தன. பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், போக்குவரத்துச் சாதனங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் தோல்கள், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.


- 2019 ஓகத்தில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமைக்கு தேயிலை தவிர்ந்த அனைத்து துணை வகைகள், கடலுணவு மற்றும் காய்கறிகளிலிருந்தான தாழ்ந்த வருவாய்களே காரணமாகும். 2019 ஓகத்தில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு சராசரி ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்த போதும் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே காரணமாகும். எனினும், கறுவா, கராம்பு மற்றும் மிளகு என்பனவற்றின் மோசமான செயலாற்றத்தின் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. மேலும், தெங்கிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கு உள்ளீட்டு உற்பத்தி மற்றும் உள்ளீடு அல்லா உற்பத்திகளின் தாழ்ந்த ஏற்றுமதி விலைகளே காரணமாகும்.
- 2019 ஓகத்தில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 ஓகத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு கனிம ஏற்றுமதிகளின் கீழான அனைத்துத் துணை வகைகளினதும் குறைந்த செயலாற்றமே காரணமாகும்.
- 2019 ஓகத்தில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.9 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட குறைப்பே ஏற்றுமதிச் செயலாற்றம் வீழ்ச்சியடைந்தமைக்கு முழுக்காரணமாக அமைந்தமையை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில். | ஓகத்து 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-ஓகத் 2018 ஐ.அ.டொ. மில். | சன-ஓகத் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **808.0** | **813.0** | **0.6** | **6,085.3** | **6,331.0** | **4.0** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 40.1 | 33.7 | (15.9) | 311.1 | 303.7 | (2.4) |
| விலங்குத்தீன் | 7.6 | 8.1 | 6.9 | 73.6 | 88.8 | 20.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 467.1 | 499.6 | 7.0 | 3,451.7 | 3,736.6 | 8.3 |
| இதில் ஆடைகள் | 436.2 | 464.4 | 6.5 | 3,222.2 | 3,478.5 | 8.0 |
| புடவைகள் | 22.8 | 26.5 | 16.0 | 166.0 | 187.5 | 12.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.1 | 8.8 | 8.9 | 63.5 | 70.5 | 11.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 80.5 | 72.8 | (9.6) | 584.4 | 591.2 | 1.2 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.5 | 24.3 | (0.6) | 195.3 | 199.9 | 2.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 37.4 | 32.5 | (13.1) | 295.7 | 275.0 | (7.0) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 8.7 | 6.0 | (30.5) | 91.1 | 120.5 | 32.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 47.0 | 43.4 | (7.8) | 387.9 | 328.4 | (15.4) |
| இரசாயன உற்பத்திகள் | 16.0 | 17.0 | 6.5 | 114.7 | 120.4 | 5.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.0 | 10.0 | (9.7) | 92.5 | 90.9 | (1.8) |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 4.9 | 7.4 | 52.0 | 19.3 | 31.4 | 63.0 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 11.2 | 9.7 | (13.7) | 101.9 | 74.1 | (27.3) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.5 | 6.7 | 2.5 | 50.7 | 49.2 | (2.8) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 16.2 | 13.9 | (14.7) | 108.0 | 120.9 | 12.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.5 | 2.8 | (18.9) | 20.8 | 19.6 | (5.8) |
| ஏனையவை | 25.8 | 25.1 | (2.8) | 186.6 | 180.3 | (3.4) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **225.4** | **217.3** | **(3.6)** | **1,723.4** | **1,667.4** | **(3.2)** |
| தேயிலை | 116.1 | 118.7 | 2.3 | 970.2 | 915.0 | (5.7) |
| இறப்பர் | 2.7 | 1.7 | (35.8) | 23.0 | 18.6 | (19.0) |
| தேங்காய் | 31.1 | 28.1 | (9.7) | 209.4 | 232.1 | 10.9 |
| வாசனைத்திரவியங்கள் | 41.6 | 33.3 | (19.9) | 225.6 | 203.4 | (9.8) |
| காய்கறிகள் | 2.2 | 2.7 | 23.8 | 18.3 | 21.2 | 16.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.8 | 3.3 | (13.7) | 23.6 | 22.7 | (3.9) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.0 | 8.9 | (10.8) | 84.0 | 70.0 | (16.7) |
| கடலுணவு | 17.9 | 20.5 | 14.1 | 169.4 | 184.5 | 8.9 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.8** | **1.9** | **(31.6)** | **22.2** | **21.3** | **(4.0)** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.2** | **1.2** | **5.4** | **11.5** | **11.3** | **(1.5)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,037.4** | **1,033.3** | **(0.4)** | **7,842.4** | **8,031.1** | **2.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2019 ஓகத்தில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்து பத்தாவது மாதமாக குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்து, 16.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) ஐ.அ.டொலர் 1,574 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.


- 2019 ஓகத்தில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்து உணவு, குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் இரண்டிலும் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலித்தது. வாசனைத் திரவியங்கள், பாற்பண்ணை உற்பத்திகள், காய்கறிகள் மற்றும் கடலுணவு என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகள் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகளின் வீழ்ச்சிக்குப் பங்களித்த வேளையில் தனியாள் உந்து ஊர்திகளின் தாழ்ந்த இறக்குமதிகள் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் சுருக்கத்தைத் தோற்றுவித்தன. உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட சலுகை ரீதியான அனுமதிப் பத்திரங்கள் நிலுவையிலிருந்தமையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2019 யூலையில் அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கு மத்தியிலும் 2018 திசெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தனியாள் உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் 46.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2019 ஓகத்து காலப்பகுதியில் அதிகரித்தன.

- 2019 ஓகத்தில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்தமைக்கு குறைந்த இறக்குமதி அளவு மற்றும் விலைகளின் விளைவாக பெற்றோலிய உற்பத்திகள் மீதான குறைந்த செலவினமே முக்கிய காரணமாகும். புடவை மற்றும் புடவைப் பொருட்கள் இரசாயன உற்பத்திகள், தாள் மற்றும் தாள் அட்டைகள் அவற்றின் பொருட்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது. எனினும் எதிர்வரும் பெரும்போக பருவகாலத்தை இலக்காகக் கொண்டு உயர்ந்த அளவு வளமாக்கிகள் இறக்குமதி செய்யப்பட்டமையின் காரணமாக 2019 ஓகத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வளமாக்கியின் இறக்குமதி மீதான செலவினம் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்த வேளையில் அடிப்படை உலோகம், கோதுமை மற்றும் சோளம் என்பனவற்றின் இறக்குமதி அதிகித்தது.

- 2019 ஓகத்தில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். எனினும், புகைவண்டிச் சாதனங்களின் இறக்குமதியினது முக்கிய தூண்டுதலினால் போக்குவரத்துக் கருவிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.


- இறக்குமதி அளவுச் சுட்டெண் 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் அலகுப்பெறுமதிச் சுட்டெண் 8.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 ஓகத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவு மற்றும் விலைகளின் இணைந்த தாக்கம் காரணமாக அமைந்தமையை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில். | ஓகத்து 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-ஓகத் 2018 ஐ.அ.டொ. மில். | சன-ஓகத் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **431.2** | **332.1** | **(23.0)** | **3,441.3** | **2,499.2** | **(27.4)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 128.6 | 117.9 | (8.3) | 1,148.1 | 917.1 | (20.1) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.7 | 2.9 | 71.6 | 113.2 | 22.2 | (80.4) |
| இதில் அரிசி | 0.4 | 0.8 | 116.2 | 100.9 | 7.8 | (92.3) |
| பால் உற்பத்திகள் | 40.9 | 38.0 | (7.1) | 231.2 | 216.1 | (6.5) |
| காய்கறிகள் | 25.3 | 22.5 | (11.1) | 220.4 | 187.6 | (14.9) |
| கடலுணவு | 19.3 | 18.0 | (6.5) | 136.0 | 145.8 | 7.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 8.9 | 13.0 | 46.9 | 180.8 | 126.4 | (30.1) |
| வாசனைத்திரவியங்கள் | 11.0 | 6.7 | (39.4) | 73.1 | 68.1 | (6.9) |
| குடிபானங்கள் | 7.3 | 5.9 | (19.7) | 57.5 | 52.1 | (9.4) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 14.2 | 11.0 | (23.0) | 136.0 | 98.9 | (27.2) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 302.6 | 214.2 | (29.2) | 2,293.2 | 1,582.0 | (31.0) |
| தனியாள் ஊர்திகள் | 142.7 | 76.7 | (46.2) | 1,092.4 | 496.4 | (54.6) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 49.5 | 50.9 | 2.8 | 349.2 | 350.5 | 0.4 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 25.1 | 18.4 | (26.7) | 214.6 | 174.5 | (18.7) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 20.6 | 17.6 | (14.6) | 158.7 | 131.3 | (17.3) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.6 | 16.0 | (35.0) | 184.7 | 157.2 | (14.9) |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 14.9 | 14.0 | (5.7) | 112.1 | 104.7 | (6.6) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 25.1 | 20.4 | (18.7) | 181.4 | 167.6 | (7.6) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,061.6** | **863.8** | **(18.6)** | **8,356.8** | **7,379.8** | **(11.7)** |
| எரிபொருள் | 398.6 | 261.2 | (34.5) | 2,768.8 | 2,576.8 | (6.9) |
| இதில் மசகெண்ணெய் | 108.9 | 45.3 | (58.4) | 595.3 | 630.8 | 6.0 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 289.6 | 215.8 | (25.5) | 2,026.2 | 1,820.7 | (10.1) |
| நிலக்கரி | 0.1 | 0.1 | (48.1) | 147.3 | 125.3 | (14.9) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 9.9 | 8.9 | (9.8) | 518.4 | 118.4 | (77.2) |
| இதில் தங்கம் | 0.1 | 0.0 | (98.2) | 438.0 | 1.7 | (99.6) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 247.8 | 233.5 | (5.8) | 1,857.9 | 1,876.9 | 1.0 |
| இரசாயன உற்பத்திகள் | 77.4 | 66.8 | (13.6) | 601.9 | 553.5 | (8.0) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 59.9 | 50.0 | (16.6) | 471.7 | 394.9 | (16.3) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 47.9 | 42.0 | (12.4) | 345.7 | 295.5 | (14.5) |
| அடிப்படை உலோகங்கள் | 34.6 | 41.5 | 19.9 | 415.6 | 366.2 | (11.9) |
| வளமாக்கி | 14.5 | 32.2 | 121.3 | 153.3 | 137.5 | (10.3) |
| கோதுமை மற்றும் சோளம் | 23.9 | 24.9 | 4.2 | 235.9 | 203.4 | (13.8) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 27.5 | 18.2 | (33.9) | 207.9 | 154.9 | (25.5) |
| வேளாண்மை உள்ளீடுகள் | 19.3 | 13.3 | (31.0) | 136.1 | 127.1 | (6.6) |
| கனிம உற்பத்திகள் | 31.6 | 11.3 | (64.2) | 129.7 | 137.0 | 5.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 68.6 | 60.1 | (12.4) | 513.8 | 437.7 | (14.8) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **393.5** | **376.3** | **(4.4)** | **3,212.2** | **3,001.8** | **(6.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 222.7 | 184.4 | (17.2) | 1,703.0 | 1,610.2 | (5.4) |
| கட்டடப் பொருட்கள் | 134.2 | 132.6 | (1.2) | 1,013.0 | 1,006.9 | (0.6) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 36.0 | 58.9 | 63.3 | 492.0 | 380.2 | (22.7) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.5 | 0.4 | (27.1) | 4.3 | 4.5 | 6.1 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.8** | **1.4** | **75.0** | **72.3** | **4.8** | **(93.3)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,887.1** | **1,573.6** | **(16.6)** | **15,082.7** | **12,885.5** | **(14.6)** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் உறுதியான அடிப்படையில் மீட்சியடைந்து உயர்ந்து வருகின்றன. இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019 யூலையின் 115,701 இலிருந்து 2019 ஓகத்தில் 143,587 இற்கு 24.1 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, ஆண்டிற்கு ஆண்டு வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 2019 யூலையின் 46.9 சதவீதம் மற்றும் 2019 யூனின் 57.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஓகத்தில் 28.3 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது. சீனா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தன.

- 2019 ஓகத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018 ஓகத்தின் ஐ.அ.டொலர் 376 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 270 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,971 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,380 மில்லியனாக மதிப்பிடப்பட்டது.


- அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 ஓகத்தில் ஐ.அ.டொலர் 518 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019 முதல் எட்டு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,414 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள் (ஓகத்து)**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 9: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்


- 2019 ஓகத்தில் அரச பிணையங்களின் மீதான வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 156 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரச பிணையங்களிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 285 மில்லியனாக விளங்கின.

- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 ஓகத்து மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன. இருப்பினும்கூட , 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான நிதியியல் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 22 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2019 ஓகத்தில் ஐ.அ.டொலர் 83 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. பெரும் எண்ணிக்கையான சமூக அபிவிருத்திகள் மற்றும் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் பகிர்ந்தளிப்புக்களைப் பெற்றமையின் காரணமாக 2019 ஓகத்தில் அரசிற்கு குறிப்பிடத்தக்க செயற்றிட்டக் கடன்கள் உட்பாய்ந்திருக்கின்றன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 ஓகத்து இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.5 பில்லியனாக விளங்கி 5.1 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, 2019 ஓகத்து இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 11.3 பில்லியனாக விளங்கி 6.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 ஒத்தோபர் 14ஆம் திகதி வரையான இவ்வாண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 1.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டு காலப்பகுதியில் ரூபா, யப்பானிய யென் மற்றும் கனேடிய டொலர் தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | (2019 ஒத்தோபர் 14 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +1.1% |
| யூரோ | -12.7% | +4.9% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | +1.9% |
| யப்பானிய யென் | -18.1% | -0.8% |
| கனேடியன் டொலர் | -9.3% | -2.0% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +5.2% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி